Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 152

வெள்ளிக்கிழமை
26 ஏப்ரல் 2024

சித்திரை 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055




"விலையும் வரியும் ஏறினால் பொருளாதார மேம்பாடு என்டு அர்த்தமாமோ?"

# இன்னொரு அரகலய தேவையேயில்லை!

## பொருளாதாரம் மேம்பட்டுள்ளதாம் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஏப்ரல் 26

நாடு தற்போது பொருளாதாரத்தில் மீண்டுள்ளது. ஆதலால் இன்னொரு அரகலயப் போராட்டம் தேவையில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

11

மனநலம் பாதிக்கப்பட்ட பெண் வன்புணர்வு

## பிரதான சந்தேகநபரான சகோதரனுக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணத்தில் போதை ஊசி செலுத்தி, மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப் பட்ட நிலையில், அந்தப் பெண்

11

வட்டுக்கோட்டைப் படுகொலை

## தேடப்பட்ட சந்தேகநபர் காரைநகரில் கைதானார்

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டைப் பகுதியில், கடத்திச் செல்லப்பட்டு கூரிய ஆயுதங்களால் சித்திரவதை செய்யப்பட்டு இளை

11

யாழ். நகரில்

## பாலியல் துர்நடத்தை; விடுதி முற்றுகை!

*மூன்று பெண்கள் உட்பட நால்வர் விளக்கமறியலில்*

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டுக்குளிப் பகுதியில் இயங்கிவந்த தனியார் விடுதியொன்றில் பாலியல் துர்நடத்தை இடம்பெறுவதாகக் கிடைத்ததகவலின் அடிப்படை

11

நீதிமன்ற வளாகத்துக்குள் இனிமேல்

## போதைப்பொருள் எதுவும் பாதுகாக்கப்படமாட்டாது

கொழும்பு, ஏப். 26

கைப்பற்றப்படும் போதைப்பொருள்கள் இனி நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து பேணப்படமாட்டாது. மாதிரிகள் வழங்கப்பட்ட பின்னர் அவை உடனடியாக அழிக்கப்படும் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

11

## ஒரே நேரத்தில் புறப்பட்ட ஈரான் - இஸ்ரேல் விமானங்கள்!

கட்டுநாயக்கவில் பரபரப்பு

கொழும்பு, ஏப். 26

இலங்கை வந்திருந்த ஈரானிய ஜனாதிபதி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சம நேரத்தில், இஸ்ரேலிய விமானமொன்றும் புறப்பட்டுள்ளமை பரபரப்பாகியுள்ளது.

ஈரான் ஜனாதிபதி பயணம்செய்த ஏ-340 என்ற இலக்கமுடைய விமானம், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலி ருந்து புறப்பட்ட வேளையில் ஏ-640 என்ற இலக்கமுடைய இஸ்ரேலிய விமானமும் கட்டு

11

## வீட்டில் திருடப்பட்ட 60 பவுண் நகைகள் கூரைக்குள் மீட்பு

வவுனியா, ஏப். 26

வவுனியா நகரசபையின் முன்னாள் உப நகரபிதாவின் வீட்டில் திருடப்பட்ட 60 பவுண் நகைகள் அவரது

11

## முதியவரொருவர் சடலமாக மீட்பு!

பளை, ஏப். 26

இரவு உணவருந்திவிட்டு படுக்கைக்குச் சென்ற 66 வயது முதியவர் ஒருவர் கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பச்சிலைப்பள்ளி பெரியபளைப் பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ப. கனகரத்தினம் (வயது- 66) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டவராவார்.

11

## வடமாகாணப் பட்டதாரிகள் போராட்டத்துக்குத் திட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 26

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பில் போட்டிப் பரீட்சைகள் நிராகரிப்புச் செய்யப்பட வேண்டும், ஏற்கனவே அரச சேவையில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை மீண்டும் ஆசிரியர் ஆட் சேர்ப்பு முறையில் கொண்டு

11

## காணி மோசடி வழக்கு ஒருவர் மறியலில்

யாழ்ப்பாணம், ஏப். 26

காணி மோசடி வழக்கொன்றில் மானிப்பாயைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

வெளிநாட்டில் வசித்துவருவோருக்குச் சொந்தமான காணியின் பராமரிப்புப் பணிகளுக்காக மாத்தி

09



## நீதிபதி இளஞ்செழியனை கொலைசெய்ய முயற்சி

### மே 21ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணம், நல்லூர்ப் பகுதியில் நீதிபதி இளஞ்செழியனை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் துப்பாக்கிச்சூட்டில், அவருடைய மெய்ப்பாதுகாவலர் ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு மே மாதம் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கடமையாற்றிய காலப்பகுதியில்

11

## தமிழரசுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு எதிராகவும், ஜனவரி 21 மற்றும் 27ஆம் திகதிகளில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவுகளை இரத்துச் செய்யக் கோரியும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. ஐந்தாவது எதிராளியான சண்முகம்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிபால சிறிசேனவை உடனடியாகக் கைதுசெய்க



### கம்மன்பில நாடாளுமன்றில் வலியுறுத்து

**கொழும்பு, ஏப். 26**

**உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை நான் அறிவேன் என்று குறிப்பிட்டுக்கொண்டு மைத்திரிபால சிறிசேன வழங்கிய சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் பொய் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

இதனால் அவர் கைதுசெய்யப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய அமர்விலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறுதின குண்டுத்தாக்குதல்களின் உண்மை வெளிப்படுத்தப்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளப்படுத்தி அரசியல் இலாபம் தேட ஒருதரப்பினர் முயற்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த விவாதத்தில் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளின் பெயர், பாதுகாப்பு விவகாரங்களுடன் தொடர்புடைய தகவல்கள் குறிப்பிடப்படுவதை அவதானிக்க முடிகிறது. போர் நிறைவடைந்தன் பின்னர் நாட்டின் புலனாய்வுப் பிரிவு பலவீனப்படுத்தப்பட்டது. நல்லாட்சி அரசாங்கம் அரசியல் நோக்கங்களுக்காக இராணுவத்தையும், புலனாய்வுப் பிரிவையும் காட்டிக் கொடுத்தது. இதனைப் பயங்கரவாதி சஹ்ரான் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டான் - என்றார். (ம)

## சஹ்ரான் சிந்தனையாளர்கள் இன்னும் நாட்டில் உள்ளனராம்

### அத்துரேலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 26

சஹ்ரானின் கொள்கைகளை கொண்ட ஐயாயிரம் பேராவது இங்கு இருக்கலாம். இங்கிருந்து சென்று ஐ.எஸ். அமைப்புடன் இணைந்து போராடுபவர்கள் இல்லையென கூறமுடியுமா?

-இவ்வாறு அபே ஜனபல கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரேலிய ரத்னதேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சஹ்ரான் உள்ளிட்ட குழுவினர் இவ்வாறான செயலில் ஈடுபடுவதற்கு கோத்தாபய ராஜபக்சவை ஆட்சிக்குக் கொண்டுவரும் சூழ்ச்சி இருந்தது என்றும், இதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக்கூற வேண்டும் என்று தற்போது பொறுப்புவாய்ந்த மதத் தலைவர்கள் கூறுகின்றனர். கோத்தாபய ராஜபக்சவின் அரசியல் தவறுகள் வேறு கதையாகும். ஆனால் இந்தத் தாக்குதலை கோத்தாபய ராஜபக்சவின் சூழ்ச்சி என்று கூறுவதற்கு முயற்சிக்கப்படுமாக இருந்தால், அது பிரச்சினைகளை மூடி மறைப்பதற்கான சூழ்ச்சி என்றே கருத வேண்டும் -என்றார். (எ-இ)

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை

## புதிய அரசாங்கத்தில் விசேட ஆணைக்குழு

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 26

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக எமது அரசாங்கத்தில் விசேட விசாரணை ஆணைக்குழு ஊடாக விசாரணைகளை முன்னெடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய வழக்கு விசாரணை மேற்கொள்ள விசேட நீதிமன்றம் அமைத்து, தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரையும் சட்டத்தின் முன்கொண்டுவருவோம். அவர்களுக்கு வழங்கக் கூடிய உயர்ந்தபட்ச தண்டனையை வழங்கவும் நடவடிக்கை எடுப்போம்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்துமாறு பல தடவைகள் அரசாங்கத்திடம் கோரியபோதும் அது நிறைவேற்றப்படவில்லை -என்றார். (எ-இ)

## கோத்தாபயவுக்கு எதிராக இலங்கையரே போராடினர்

### கபீர் காசீம் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.26

தமிழ், முஸ்லிம் மக்களேதன்னை விரட்டியடித்தனர் என்று முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச குறிப்பிட்டிருப்பது முற்றிலும் பொய்யானது. அவர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றபோதே முஸ்லிம் நாடே அவருக்குத் தஞ்சம் வழங்கியது என்பதை அவர் மறந்துவிட்டார்.

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கோத்தாபய ராஜபக்சவிடம் இருந்து பதவியைப் பறிப்பதற்கு முஸ்லிம்கள் உள்ளிட்ட சிறுபான்மைமக்கள்திட்டமிடவில்லை. மாறாக இலங்கையர்கள் என்ற வகையில் தனிப்பட்ட ரீதியில் அந்தப் போராட்டத்தில் சம்பந்தப்பட்டிருப்பார்கள். ஆனால் கோத்தாபயவுக்கு ஏற்பட்டது இறைவனின் சாபம் என்று நான் நினைக்கிறேன்.

சடலங்களை எரித்து முஸ்லிம் மக்களின் உள்ளங்களைப் புண்படுத்தினார். முஸ்லிம் மக்களுக்கு எதிராக கோத்தாபய ராஜபக்ச செயற்பட்டபோதும் இறுதியில் அவருக்குத் தஞ்சம் வழங்க எந்த பௌத்த நாடும் முன்வரவில்லை.

அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளவே கோத்தாபய ராஜபக்ச சிறுபான்மை மக்களுக்கு எதிராகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இதுவரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. கோத்தாபய ராஜபக்ச தனது புத்தகத்தில் எழுதியிருக்கும் பிழையான கருத்துகளைத் திருத்திக் கொள்ளவேண்டும். ஏனெனில் இது வரலாற்றில் பதிவாகும் - என்றார். (எ-இ)

## ரணில் ஜனாதிபதியாக தொடர வேண்டுமாம்!

### மன்னாரில் வைத்து அமைச்சர் மனுஷ தெரிவிப்பு

மன்னார், ஏப். 26

ஜனாதிபதியாக ரணிலே இருக்கவேண்டும் என்று, அன்று அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டன. இப்பொழுதும் இந்த நிலையே இருக்கின்றது. என்று தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

மன்னாரில் ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநிதிகளை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்துப் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி மக்கள் தெரிவில் ஆட்சிப்பீடம் ஏறவில்லை. மாறாக இந்த நாட்டைக் கட்டியெழுப்ப பலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டபோதும் யாரும் முன்வராத நிலையிலேயே அதைப் பொறுப்பேற்று ஆட்சிப் பீடம் ஏறினார். இதற்கு நாம் யாவரும் ஒன்றுபட்டு அவருடன் செயற்படவேண்டியவர்களாக இருக்கின்றோம். - என்றார். (ஒ-60)

## விஜயதாஸ மீது ஒழுக்காற்று நடவடிக்கை



கொழும்பு, ஏப். 26

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

விஜயதாஸ ராஜபக்ச பெரமுனக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றிருக்கும் சமநேரத்தில், சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டமை தொடர்பிலேயே ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட உள்ளது.

விஜயதாஸ ராஜபக்ஸ பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமையை இழந்தால் அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையும் சவாலுக்கு உட்படுத்தப்படும் எனவும் சுட்டிக் கட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சுதந்திரக் கட்சியின் சிக்கல்கள் பூகோள அரசியலே காரணமாம்



### சொல்கிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு ஏப். 26

சர்வதேச சக்திகளின் பொறிக்குள் சுதந்திரக்கட்சி தற்போது சிக்கியுள்ளது என்று அந்தக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலரான நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

'விஜயதாஸ ராஜபக்சவும் நிமால் சிறிபாலடி சில்வாவும் அமைச்சர்கள். கட்சி என்ற ரீதியில் எடுத்து கொண்டால் நிமால் சிறிபாலடி சில்வாவே மூத்த உறுப்பினர். எனவே, விஜயதாஸவை இணைப்பதற்கும், நிமால் தரப்பை மைத்திரி எதிர்ப்பதற்கும் உள்ள காரணம் புரியவில்லை' எனவும் தயாசிறி குறிப்பிட்டார்.

அதேவேளை, மைத்திரிபால சிறிசேன தற்போது நன்றாகவே இறுகியுள்ளார். எனவே, நாட்டில் இருந்து தப்பிச்செல்லக்கூடும், வெளிநாடொன்றில் அரசியல் தஞ்சம் கோர முயற்சிக்கக்கூடும், பாதுகாப்புக் கவசமொன்றை ஏற்படுத்திக்கொள்ளவே விஜயதாஸ தரப்பை அணுகியுள்ளாரா எனக் கூறப்படுவது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, 'எனக்கு அது பற்றிச் சொல்ல முடியாது.

பல பிரச்சினைகள் இருக்கும் போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான தீர்வைத் தேடக்கூடும்.

சுதந்திரக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினையில் பூகோள அரசியலும் உள்ளது' - என்றார் தயாசிறி. (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் முடிவுக்கு பின்னரே பெரமுன வேட்பாளர் அறிவிப்பு



## பஸில் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.26

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்ற உத்தியோகபூர்வ அறிவிப்புக்குப் பின்னர் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் உள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பஸில் ராஜபக்சவுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் என்ற ரீதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் பதவியைப் பொறுப்பேற்பது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது என்றும், இது தொடர்பில் கட்சி ஏற்கனவே நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளது என்றும் பஸில் ராஜபக்ச ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளார்.

(எ-இ)

# வஹிதியை கைதுசெய்ய கோரிய ஆர்ஜன்டீனா

கொழும்பு, ஏப்.26

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியுடன் பயணம் செய்த ஈரானிய உள்விவகார அமைச்சர் அஹமட் வஹிதியை கைது செய்யவேண்டும் என்று ஆர்ஜன்டீனா இலங்கையிடம் கோரிக்கை விடுத்திருந்தது. ஆனால் அவர் இலங்கைப் பயணத்தில் உள்ளடக்கப்படவில்லை இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி பாகிஸ்தானுக்குச் சென்றபோது ரைசியுடன் அஹமட் வஹிதியும் பாகிஸ்தானுக்குச் சென்றிருந்தார். ரைசி பாகிஸ்தானிலிருந்து நேரடியாக இலங்கைக்கு வந்தபோதும், வஹிதி இலங்கைக்கு வரவில்லை.

1994ஆம் ஆண்டு ஆர்ஜன்டீனாவின் தலைநகர் புவனஸ் அயர்சில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 85 யூதர்கள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு அஹமட் வஹிதியே பொறுப்பு என வஹிதிக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த நிலையில் சர்வதேச பொலிஸ் (இன்டர்போல்) வஹிதியை கைது செய்யவேண்டும் என்று சர்வதேச ரீதியாக கோரிக்கை விடுத்திருந்தது.

(எ-6)

# மின்சாரசபை சட்டவரைவு நாடாளுமன்றில்

கொழும்பு, ஏப்.26

மின்சாரசபை சீர்திருத்தங்களை உள்ளடக்கிய இலங்கை மின்சார சபை சட்ட வரைவு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி துறையில் தனியார் துறையின் அதிக பங்களிப்பை இந்தச் சட்டவரைவு வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-இ)

# மஹிந்தானந்தவுக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு ஏப்ரல் 30

கொழும்பு, ஏப்.26

சட்டவிரோதமாக சம்பாதித்த 27 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதியில் கொழும்பு கின்சி வீதியில் சொகுசு வீடு ஒன்றைக் கொள்வனவு செய்தார் என பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு இந்த மாதம் 30ஆம் திகதி அறிவிக்கப்படும் என கொழும்பு உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்படவிருந்தது. ஆனால் இது தொடர்பான தீர்மானம் எதிர்வரும் 30ஆம் திகதி அறிவிக்கப்படும் என உயர் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மஹாரசிங்க தெரிவித்தார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

(எ-இ)

# மது விற்பனை அ.பத்திரங்களை வழங்கும் எம்.பி.க்கள்

கொழும்பு, ஏப்.26

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஆளும் மொட்டுக் கட்சி உறுப்பினர்களும் மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொடுக்கும் தரகர்களாகச் செயற்பட்டு வருகின்றனர். மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்ட விடயம் கட்சித்தலைவர் சஜித் மதத்தலைவர்கள் சிலரும் மதுபானசாலைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-6)

# விஜயதாஸவுக்கு தடையுத்தரவு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸவும் பொதுச் செயலாளராக துஷ்மந்த மித்ரபாலவும் செயற்படுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும், தற்காலிக தலைமைச் செயலர் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த தடைவிதித்து மற்றொரு தடையுத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

இந்தத் தடையுத்தரவு எதிர்வரும் மே 8 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டது. மஹிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன மற்றும் ... ஆகியோருக்கு எதிராகவும் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ச-இ)

# புதினம் தெரியுமோ?

**யா**ழ்ப்பாணத்தில கனக்கப்பேர் போய்வாற ரெயில்வே ஸ்ரேசன்களில முதலாமிடம் யாழ்ப்பாணம் ரவுண் எண்டால், இரண்டாமிடம் கொக்குவில்ல உள்ள ஸ்ரேசன் தான். கம்பஸுக்குப் போய் வாறவை, வெளிமாவட்டங்களுக்கு வேலைக்குப்போறவை எண்டு இந்த ஸ்ரேசனில சனத்துக்குப் பஞ்சமில்லை. அப்பிடிப்பட்ட ஸ்ரேசனில 'சப் ஸ்ரேசன் மாஸ்ரரா' இருந்தவர் லட்சக்கணக்கில காசை ஆட்டையைப் போட்டிட்டார் எண்டு, அந்த ஸ்ரேசன்னயே 'சீல்' வைச்சு மூடிட்டினமாம்.

ஒரு ரெயில்வே ஸ்ரேசனில எப்பிடிக் காசடிக்க முடியும்? அதுவும் நாலுமாசமா இப்பிடி உள்ளால ஆட்டையைப்போட ஏலுமோ? எண்டெல்லாம் கனக்க கேள்வியள் வரத்தான் செய்யுது. உந்த ரெயில்வே ஸ்ரேசனில ரிக்கெற் குடுக்கிறதுக்கு 'சப் ஸ்ரேசன் மாஸ்ரர்' தான் பொறுப்பு. அவர் நிரந்தர வேலையாள்கிடையாது. ஒப்பந்த அடிப்படையிலதான் அவைக்கு வேலை. இப்பிடி நாலைஞ்சு ஸ்ரேசனை பாக்கவேண்டிய பொறுப்பு 'ஸ்ரேசன் மாஸ்ரருக்கு' இருக்கு. அவர் யாழ்ப்பாணம் ஸ்ரேசனில இருந்திட்டு, அடிக்கடிபோய் இவையைளைச் செக்பண்ண வேணும். அப்பிடிஅவர் செக்பண்ண மறந்ததாலையோ, இல்லாட்டி அப்பிடி செக் பண்ணியும் பிடிக்காதபடிதில்லாலங்கடி வேலையை 'சப்ஸ்ரேசன் மாஸ்ரர்' செய்ததாலையோ என்னவோ கனகாலமா உந்த காசடிக்கிற விளையாட்டு நடந்திருக்கெண்டு கதைக்கினம்.

எல்லா ரிக்கெற்றிலையும் சீரியல் நம்பர் அடிச்சு, அதின்படி தான் ரிக்கெற் குடுக்கவேணும். இந்த 'சப் ஸ்ரேசன் மாஸ்ரர்' என்ன செய்திருக்கிறார் எண்டால் பழம் இருக்கச் சுளை விழுங்கிற மாதிரி ஒரு வேலை செய்திருக்கிறார். உதாரணமா ஒருநாளைக்கு சீரியல் நம்பர் 500 இல முடிஞ்சால், அடுத்தநாள் ரிக்கெற் 501 தானே தொடங்கவேணும். ஆனால் ஆள் 700 இல இருந்து ரிக்கெற் குடுக்கத் தொடங்கியிருக்கிறாராம். இப்பிடிச் செய்யேக்க முதல் நாள் சீரியல் நம்பரோட ஒருத்தரும் ஒப்பிட்டுபாக்க மாட்டினம் எண்ட தைரியம். அவர் நினைச்ச மாதிரியே மேலதிகாரிமாரும் அதைக் கண்டுபிடிக்காததால இப்பிடி லட்சக்கணக்கில காசைச் சுருட்டி, இப்ப அது பிடிபட்டுப் போட்டுது. உதுக்குக் காரணமான 'சப் ஸ்ரேசன் மாஸ்ரரும்', 'ஸ்ரேசன் மாஸ்ரரும்' இப்ப தற்காலிகமா வேலையில இருந்து நிப்பாட்டுப் பட்டிருக்கினம்.

**இதெல்லாம், அவையின்ர திணைக்களப் பிரச்சினை. ஆனால் இந்தப் பிரச்சினையால உடனடியா அந்த ஸ்ரேசனுக்கு சீல் வைச்சதுதான் சனத்துக்குப் பெரும் சில்லெடுப்பா போட்டுது. எக்கச்சக்கம்பேர் போய்வாற ஸ்ரேசனை இப்பிடி மின்னாமல் முழங்காமல் சீல் வைச்சுப் பூட்டினால் எங்கபோய் ரிக்கெற் எடுக்கிறதெண்டு தெரியாமல், அரைவாசிப்பேர் பஸ்ஸில போவம் எண்டு வெளிக்கிட்டிட்டினம். கொக்குவில் ஸ்ரேசனில ஏறுற ஆக்கள் யாழ்ப்பாணம் ரவுணில உள்ள மெயின் ஸ்ரேசனில ரிக்கெற் எடுக்கிற வசதி செய்யப்பட்டிருக்காம். ஆனால் அது சனத்துக்கு எப்பிடித் தெரியும்? அதைப்பற்றி உரியமுறையில அறிவிச்செல்லோ இருக்கோணும். தென்னையில தேள் கொட்ட பனையில நெறி கட்டின கதையா, ஆரோ காசடிச்சுக்கொண்டுபோக, அப்பாவிச் சனமெல்லோ அந்தரப்பட்டுத் திரியினம்.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொற்றாநோய் விழிப்பு சைக்கிள் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 26
பருத்தித்துறையில் தொற்றா நோய் பாதிப்புகளிலிருந்து பொதுமக்கள் தம்மை விடுவித்துக்கொள்வது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில் சைக்கிள் ஓட்டப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட் டது. பருத்தித்துறை ஆதார மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இணைந்து இதனை ஒழுங்கமைத்தனர். பருத்தித்துறை ஆதார மருத்துவமனை முன்றிலில் ஆரம்பமான சைக்கிள் ஓட்டப் போட்டி, யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி ஊடாக பயணித்து நெல்லியடிச்சந்தியை சென்றடைந்து அங்கிருந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதியூடாக மாலுசந்தி வழியாக மீண்டும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையை வந்தடைந்தது.

இதில் மருத்துவர்கள், மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ச-100)

# மஹோற்சவ பெருவிழா

சுன்னாகம், ஏப். 26
ஸ்ரீ கதிரமலைச் சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா, நேற்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து, மே மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும், அன்றைய தினம் இரவு கொடியிறக்க உற்சவமும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ப-66)

உற்சாகமாய் இருப்போம்
நீரிழிவு நோயை தடுப்போம்
GINSOMIN®


சுறுசுறுப்பான, புத்துணர்வான, பலமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு
Ginsomin இன் பிரதான கூறான அசல் கொரியன் பன்க்ஸ் ஜின்சென் உடலில் இன்சுலின் செயற்பாட்டை மேம்படுத்துவதோடு இன்சுலின் எதிர்ப்பு செயற்பாட்டை குறைக்கிறது என்பது மருத்துவ ரீதியில் உறுதி செய்யப்பட்டுள்ளது.
நாடளாவிய ரீதியிலான சுப்பர் மார்க்கட்டுகள் மற்றும் பாமசிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
MEGA We care
For Your Wellness
www.megawecare.lk
077 34 100 71
011 43 66 609
Ginsomin Srilanka
இறக்குமதி செய்து விநியோகிப்போர்: A Baur & Company (Pvt) Limited



# வளர்மதி வி.கழகத்துக்கு உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26
மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழகத்துக்கு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கிளைத் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவனால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் சமூகச் செயற்பாட்டாளர் சுபாஷ், மூளாய் வேரம் விளையாட்டுக்கழகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-125)

# குரோதி : புதுவருடப் பலன்கள்




வாக்குசாதுர்யத்தால் வாதங்களில் வெல்லும் நீங்கள், வந்த சண்டையை விடமாட்டீர்கள். சூரியனும், சுக்ரனும் சாதகமாக இருக்கும்போது இந்த குரோதி வருடம் பிறப்பதால் எதிர்ப்புகள் அடங்கும். வீரியத்தைவிட காரியம் தான் முக்கியம் என்பதை உணருவீர்கள். வெளிவட்டாரத்தில் பெருமையாகப் பேசப்படுவீர்கள். உங்கள் ராசிக்கு 8ஆம் வீட்டில் சந்திரன் நிற்கும்போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும். சவால்களைச் சமாளிக்கும் வல்லமை கிடைக்கும். 30.04.2024 வரை குரு உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டில் மறைந்து கிடப்பதால் வேலைகளை போராடி முடிப்பீர்கள்.

1.05.2024 முதல் வருடம் முடியும் வரை குரு பகவான் 7ஆம் வீட்டில் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்க்க இருப்பதால் உங்களின் திறமைக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கும். அழகு, இளமைக் கூடும்.

இந்தாண்டு முழுக்க அர்த்தாஷ்டமச் சனியாக அமர்வதால் சின்னச் சின்ன வேலைகளைக் கூட அலைந்து முடிக்கவேண்டி வரும். தவிர்க்க முடியாத செலவுகள் அதிகரிக்கும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்குவீர்கள். யாரைநம்புவது, நம்பாமல் இருப்பது என்ற குழப்பம் அதிகமாகும்.

இந்தாண்டு முழுக்க ராகு ராசிக்கு 5ஆம் வீட்டிலேயே அமர்வதால் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் திணறுவீர்கள்.

01.05.2024 முதல் உத்தியோகத்தில் எல்லோராலும் மதிக்கப்படுவீர்கள். வேலைச்சுமை குறையும். சகஊழியர்களால் இருந்து வந்த பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும். எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு தாமதமாகும்.

இந்தப் புத்தாண்டு ஓய்வெடுக்க முடியாத அளவுக்கு பரபரப்பாகவும், அதிக நேரம் உழைக்க வைப்பதாகவும் இருந்தாலும் உங்களுக்கென்று ஒரு தனி அங்கீகாரத்தை தருவதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வலியச்சென்று தலைவலியை வாங்குதல்


'யார் அதிக கடவுள் பக்தி உடையவர் ?'என்று இருவருக்கிடையே போட்டி வந்தது. ஒருவன் ஒரேயொரு கடவுளை மட்டுமே எப்போதும் வழிபடுபவன். மற்றவன் உலகில் உள்ள எல்லாக் கடவுளையும் பேதம் பாராமல் வழிபடுபவன். இதனால் யார் அதிக கடவுள் பக்தி உடையவன் என்று ஊரவர்களாலும் தீர்மானிக்கமுடியாமல் இருந்தது. இதற்கு எல்லாக் கடவுளர்களையும் வணங்குபவன் ஒரு வழி சொன்னான்.

'நாங்கள் இருவரும் மலை உச்சியில் இருந்து குதிப்போம். யாரைக் கடவுளர்கள் காப்பாற்றுகின்றனரோ,அவரே அதிக பக்தியுடையவர்' என்று அவன் சொன்ன யோசனைக்கு ஊரவர்களும் சம்மதித்தனர். திருவுளச் சீட்டின் மூலம் ஒரேயொரு கடவுளை வணங்குபவனே முதலில் மலையுச்சிக்குப் போகவேண்டும் என்று முடிவானது. அவனும் போனான். தன்னைக் காப்பாற்றுமாறு கடவுளிடம் வேண்டிக்கொண்டு கீழே குதித்தான். அடுத்த நொடியே அவனது கடவுளின் கரம் அவனைத் தாங்கிப் பிடித்து, பத்திரமாக கீழே அவனைக் கொண்டு வந்து சேர்த்தது. அடுத்ததாக, பல கடவுள்களை வணங்குபவன் மலையில் இருந்து தன் இஷ்ட தெய்வங்களை எல்லாம் காப்பாற்றுமாறு வேண்டிக்கொண்டே குதித்தான். 'உன்னில் தான் அவன் அதிக பக்தி அதனால் நீதான் அவனைக் காப்பாற்றவேண்டும்' என்று அவன் வணங்கிய இஷ்ட தெய்வங்கள் எல்லோரும் மாறி மாறிச் சண்டை பிடித்தபடி இருந்தார்கள். அதனால் எந்தக் கடவுளும் அவனைக் காப்பாற்றப் போகவில்லை. இறுதியில் அவன் கீழே விழுந்து செத்தே போனான். நம்பிக்கை என்பது ஓரிடத்தில் வைக்கப்படும் போதுதான் அதற்குரிய சக்தியைத் தருகின்றது. வெறுமனே பக்திக்கு மட்டுமல்ல, வாழ்வியலுக்கும் இதுவே அடிப்படை. ஆனால் அந்த நம்பிக்கையைப் பரவலாக்கும் போது உண்மையான நம்பிக்கையை யாரில் வைத்திருக்கிறோம் என்ற சந்தேகம் எமக்கே வந்துவிடக்கூடும். இலங்கை அரசாங்கமும் இப்படிப்பட்ட நிலையில் தான் உள்ளது.

கடலில் தத்தளிப்பவன் கையில் அகப்படும் எல்லாவற்றையுமே தனக்கான மீட்புப்பொருளாக நினைத்துப் பற்றுவதைப் போல, உதவி செய்வதாக எந்த நாடு சொன்னாலும், அந்த நாட்டுக்கு செங்கம்பளம் விரித்து, வரவேற்று விருந்து வைப்பது இலங்கையின் இயல்பாகி விட்டது. அந்த நாடுகளை அரவணைப்பதால் மற்றைய நாடுகளின் பகையைச் சம்பாதிக்கவேண்டியிருக்கும், அந்தப் பகையால் இப்போதிருப்பதை விடவும் மோசமான நிலை உண்டாகலாம் என்பன பற்றியெல்லாம் இலங்கை கிஞ்சித்தும் கணக்கெடுப்பதாகவும் தெரியவில்லை. பேஸ்புக்கில் அதிகநபர்களை நண்பர்களாக வைத்திருப்பது தான் கௌரவம் எனச் சிலர் எண்ணுவதைப் போல, உலக அரசியலிலும் அதிக நட்பு நாடுகளைச் சம்பாதிப்பதே கெட்டித்தனமான இராஜதந்திரம் என இலங்கை நம்பிக்கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைய உலகமயமாதலில் அது எவ்வளவு ஆபத்தான காரியமென்பதை வெகுவிரைவிலேயே இலங்கை அனுபவம் மூலமும் உணரத்தான் போகின்றது. அமெரிக்கா,சீனா, இந்தியா,பாகிஸ்தான்,இஸ்ரேல், பலஸ்தீனம் என்று தமக்குள்ளே கீரியும் பாம்புமாக பகைமை பாராட்டும் நாடுகளுடன் எல்லாம் இலங்கை தோளில் கைபோட்டு, அவர்களின் 'பொக்கற்றுக்குள்' இருந்து கொஞ்ச உதவிகளையும் உரிமையோடு கேட்டுப் பெற்றிருந்தது. அந்தநாடுகளும், இப்படிச் சில்லறைகளை விசிறிவிட்டு, எங்கள் வளங்களை எல்லாம் கூறுபோட்டு தமக்குரியன வாக்கிக் கொண்டன.

இந்த நட்புக்களத்தில் இப்போது ஈரானையும் இறக்கி விட்டிருக்கிறது இலங்கை. இதுதான் பெரும் தலைவலியை இலங்கைக்கு கொண்டுவரப்போகின்றது. அமெரிக்காவின் வல்லாதிக்கக் கனவுக்கு முட்டுக்கட்டையாக, அணுவாயுதத்திறனோடு இருக்கும் நாடுகளில் ஈரான் முக்கியமானது. எனவே ஈரானின் மீது போர் தொடுக்கும் சந்தர்ப்பத்தை அமெரிக்கா எதிர்பார்த்துக் காத்திருந்தது. அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான இஸ்ரேல், சிரியாவிலுள்ள ஈரானியத் தூதரகத்தை ஏவுகணையால் தாக்கி,இராணுவ உயர்நிலைத் தளபதிகளை கொன்றழித்துச் சீண்டியது. இந்தச் சீண்டலுக்கு ஈரான் ட்ரோன்கள் மூலம் பதிலடி கொடுக்க, இது தான் சந்தர்ப்பம் என்று களத்துக்குள் புகுந்துள்ள அமெரிக்கா, 'ஈரானோடு உறவுபாராட்டும் நாடுகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும்' என்ற தனது வழக்கமான மிரட்டல் ஆயுதத்தைக் கையில் எடுத்திருக்கிறது. அமெரிக்காவின் இந்த அறிவிப்பு வெளிவரும் சந்தர்ப்பத்தில் தான் ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி இலங்கையில் காலடி எடுத்து வைத்திருந்தார். எனவே தன் அறிவிப்பையும் மீறி, இலங்கை அரசாங்கம் ஈரானை அரவணைத்ததை அமெரிக்கா சகித்துக்கொண்டிருக்கப் போவதில்லை. இலங்கையைப் பழிவாங்கும் நேரடி, மறைமுக நடவடிக்கைகள் அனைத்தையும் அது செய்தே தீரும். அமெரிக்க ஆதரவு இல்லாவிட்டால் சீனாவின் ஆதரவுடன் தப்பிக்கொள்ளலாம் என இலங்கை நினைத்தால் அதைவிட மடத்தனம் வேறில்லை. என்னதான் அமெரிக்காவுடன் ஜென்மப் பகை இருந்தாலும், ஈரான் விடயத்தில் அமெரிக்காவுக்கு எதிர்நிலையை சீனா ஒரு போதும் எடுக்காது,இந்தியாவும் அவ்வாறேதான். எனவே ஈரானை அணைக்கப் போய், தன்னைச் சுற்றி நின்ற அத்தனை நட்புநாடுகளும் தூரப்போகும் நிலையை ஏற்படுத்தி, அவற்றின் உதவித்திட்டங் களுக்கும் இலங்கை ஆப்பு வைத்திருக்கிறது. ஈரான் அதிபரை இலங்கைக்குள் கால்வைக்க அனுமதித்தமைக்கான விலையை இலங்கை கொடுக்கும் போது, அதன் விளைவுகள் மிகப்பாரதூர

மானதாகவே இருக்கும். ஆனால் விளைவுகளின் வலியை அனுபவிக்கப்போவது அரசாங்கமோ அரசியல்வாதிகளோ அல்ல, [illegible]




# இந்திய வீட்டுத்திட்டம்; மக்களிடம் கையளிப்பு

**கொழும்பு, ஏப். 26**

**இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மேலும் 4 கிராமங்கள் விரைவில் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.**

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டு வரும் 101 கிராமங்களில் 7 கிராமங்கள் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கம்பஹா, கண்டி, வவுனியா, பதுளை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே அமைத்துக் கையளிக்கப்பட்டன. 90 கிராமங்களில் 1,668 வீடுகள் கட்டும் பணி இதுவரை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 732 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது கொழும்பு, இரத்தினபுரி, திருகோணமலை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட 4 கிராமங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (ச-இ)

## மேலதிக வகுப்புகளுக்கு செவ்வாய் முதல் தடை

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சார்த்திகளுக்கான மேலதிக வகுப்புகள் எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் தடை செய்யப்பட்டுள்ளது என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளது. அதன்படி விதிகளை மீறி மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகளை நடத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ச-இ)

## சுற்றுலாவிகள் வருகையில் இம்மாதம் மந்தம்

கொழும்பு, ஏப். 26

ஏப்ரல் முதல் மூன்று வாரங்களில் மொத்தம் ஒரு லட்சத்து 7ஆயிரத்து 124 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கையை ஆண்டின் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடும் போது, ஒரு மந்த நிலையைக் காட்டுகிறது. அற்கமைய நாளாந்த வருகை சராசரி 5ஆயிரத்து 100 என்ற அளவில் குறைந்துள்ளதுடன், வாராந்தம் சராசரி வருகை 35ஆயிரமாக குறைவடைந்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## தியத்தலாவ விபத்து; சாரதிகளுக்குப் பிணை

கொழும்பு, ஏப். 26

தியத்தலாவையில் மோட்டார் பந்தயப் போட்டியின்போது ஏழு பேரைப் பலிகொண்ட விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு சாரதிகளும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். பண்டாரவளை நீதிவான் நீதிமன்றில் அவர்களை நேற்றுமுன்தினம் முற்படுத்திய போதே பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ச-இ)

## மலேரியாவால் 9 பேர் பாதிப்பு

கொழும்பு, ஏப்.26

இந்த ஆண்டு மலேரியாத் தொற்றால் 9 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மலேரியா கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் புபுது குலசிறி தெரிவித்தார். ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்று திரும்பியவர்களே அதிகளவு மலேரியாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

**நாளை**

27.04.2024

**சனிக்கிழமை**

**சித்திரை - 14**

சுபநேரம் : 02.59 – 04.29

ராகுகாலம் : 08.59 – 10.29

**நாளொரு நல்வார்த்தை**

**மனிதாபிமானம் என்பது**
**அழுவதல்ல;**
**போராடுவது;**
**அது போர்க்குணம் மிக்கது.**

**-மார்க்சிம் கார்க்கி-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளரே

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.26

**சிறுபான்மையினக் கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு கட்சி சாராத பொதுவேட்பாளராகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தேர்தலுக்கு நேர்மையாக முகங்கொடுக்க அஞ்சி, மக்களை ஏமாற்றி வாக்குவேட்டை நடத்துவதற்காக சிலர் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கிவருகின்றனர். செய்யமுடியாத விடயங்களைக்கூட உறுதிமொழியாக வழங்குகின்றனர்.

இதனால் அரசியல் கட்சிகள்மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாமற்போயுள்ளது. ஐக்கியதேசியக்கட்சிசெய்யக்கூடிய விடயங்களையே கூறிவரு கின்றது. கசப்பாக இருந்தாலும் உண்மையைக் கூறுவது மேலானதாகும்.


ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியுடன் மட்டும் அல்ல அனைத்துக் கட்சிகளுடனும் எமக்குத் தொடர்பு உள்ளது. அனைவரையும் இணைத்துக்கொண்டு கட்சிசாராத வேட்பாளராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார் - என்றார். (எ-இ)

## கொன்றையடி வைரவர் அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கு சட்டநாதர் வீதி கொன்றையடி திருவருள்மிகு வைரவப் பெருமான் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் மே மாதம்6 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.(ச)



## குருதிக்கொடை ஞாயிறன்று

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்.போதனா மருத்துவமனையில் நிலவும் குருதிப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு தென்மராட்சி இளைஞர்களின் ஏற்பாட்டில் குருதிக் கொடை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் குருதிக்கொடை நிகழ்வு இடம்பெறும் என்றும், குருதிக்கொடையாளர்கள், ஆர்வலர்கள் பங்கேற்று குருதிக் கொடை வழங்குமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச)

## ஊடக விமர்சனத்துக்கு எதிரான பொலிஸ் முறைப்பாட்டுக்கு ஆளுநர் செயலகம் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியருக்கு எதிராக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் முறைப்பாட்டுக்கு பல தரப்புகளும் கண்டனம் வெளியிட்ட நிலையில், பொலிஸ் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டமைக்கான தன்னிலை விளக்கத்தை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலக ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக கருதப்படும் ஊடகங்கள் அதன் தாற்பரியம் அறிந்து செயற்படவேண்டும். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கணக்காளரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியருக்கு தனது நியாயப்பாடுகளைச் சமர்ப்பிக்க பொலிஸாரால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு அமைய, கடந்த 22ஆம் திகதி வாக்குமூலம் வழங்க அவர் சென்றிருந்தார். விடயம் தொடர்பான முறைப்பாடு ஆளுநர் செயலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இதில் ஆளுநரின் எவ்வித தலையீடுகளும் இல்லை.

அதிபர் தரத்துக்கான போட்டிப் பரீட்சைகள் அண்மைக்காலமாக நடத்தப்பட்ட போதிலும், சில கடமை நிறைவேற்று அதிபர்கள் பரீட்சையில் சித்தியடையத் தவறியுள்ளனர். இந்நிலையில், அண்மையில் அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு வழங்கப்பட்ட அதிபர் நியமனத்தின் போதும், சில கடமை நிறைவேற்று அதிபர்கள் உள்வாங்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் கடமை நிறைவேற்று அதிபர் சங்கத்தால் சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் ஆளுநரிடம் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது. மத்திய கல்வி அமைச்சிடமும் தமது கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதால், அவர்களின் தீர்மானம் கிடைக்கும்வரை, கடமை நிறைவேற்று அதிபர்களாகச் செயற்பட அனுமதிக்குமாறு ஆளுநரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு அமைய, மத்திய அமைச்சின் தீர்மானம் வரும் வரை அவர்கள் கடமை நிறைவேற்று அதிபர்களாக செயற்பட ஆளுநரால் அனுமதி வழங்கப்பட்டது. எனினும், இவர்களின் கோரிக்கையை அமைச்சரவை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த விடயங்கள் ஆளுநரின் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டது என்பது தொடர்பில் கடமை நிறைவேற்று அதிபர் சங்கத்துக்குத் தெளிவுபடுத்தப்பட்ட பின்புலத்தில், வடக்கு மாகாணத்தின் அமைச்சுகளின் செயலர்களின் செயற்பாடுகள் தொடர்பிலும், ஆளுநரின் நடவடிக்கை தொடர்பிலும், கடந்த மார்ச் மாதம் 18ஆம் திகதி வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் விமர்சிக்கப்பட்டிருந்தது. 'சிங்களவர் ஒருவர் வடக்கின் ஆளுநராக இருந்தால்...' என்றும் அவர் தனது ஆசிரியர் தலைப்பில் எழுதியிருந்தார். இதனூடாக இன நல்லிணக்கத்துக்குப் பாதகம் ஏற்படும் வகையில் அவர் எழுதுகிறாரோ என்ற கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டி உள்ளது. நிர்வாக சமநிலையைச் சீர்குலைக்கும் வகையிலும், இன, மதங்களுக்கு இடையில் பங்கம் ஏற்படும் வகையில் அந்த ஆசிரியர் செயற்பட்டுள்ளார் என நாம் கருதுகிறோம். பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஊடகங்கள் எம்மோடு இணைந்து செயற்படவேண்டும். ஊடக சுதந்திரத்தில் ஒருபோதும் நாம் தலையிடுவதில்லை என்பதுடன் ஊடகங்களுடன் இணைந்து மக்கள் பணியாற்ற நாம் கடமைப்பட்டுள்ளோம் என்பதையும் கூறிக்கொள்கிறோம்- என்றுள்ளது. (ஓ-3.26)

## வவுனியாவில் டெங்கு ஒழிப்பு

வவுனியா, ஏப். 26

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய சமுதாய பொலிஸ் குழுவால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. வவுனியா, பிரதிப் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கமைவாக, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

வவுனியாவில் அதிகளவிலான மக்கள் வந்து செல்லும், புதிய பேருந்து நிலையப் பகுதியில் துப்புரவாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (ப-18)



## கொக்குவில் ரயில் நிலையத்தில் 20 லட்சம் ரூபா நிதி மோசடி!

யாழ்ப்பாணம், ஏப். 26

கொக்குவில்ரயில்நிலையத்தில் 20 லட்சம் ரூபா நிதிமோசடி இடம்பெற்றமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் புகையிரதத் திணைக்களத்தால் இந்த ரயில் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. அங்கு கடமையாற்றிய அதிகாரியும் தற்காலிக பணி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (ஏ-125)

## 'இரகசியங்கள்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 26

ஏ.ஈ.பீரிஸின் 'இரகசியங்கள்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பண்டத்தரிப்பிலுள்ள சண்டிலிப்பாய்ப் பிரதேச கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி முன்னாள் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன், சிறப்பு விருந்தினராக சட்டத்தரணியும் எழுத்தாளருமான சோ.தேவராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப்.26


இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால், பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் கீழ் அமைந்துள்ள பசுபதீஸ்வர ஆலயத்தில், இலவச கலைப்பயிற்சிநெறிகள் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு வார இறுதி நாள்களில் நடைபெறவுள்ளன.

பயிற்சிகளுக்காக 6 தொடக்கம் 18 வயதுக் குட்பட்டோர் தங்கள் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக நிர்வாகக் கிளையில் ஒப்படைக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 06 . 1953



இறப்பு 24 . 04 . 2024

## நடராஜா சக்திவேல்

யாழ். வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா சக்திவேல் நேற்றுமுன்தினம் (24.04.2024) புதன்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்துலிங்கம் - அன்னம் தம்பதியரின் ஆசை மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், சுஜிதா (Agrarian Dev. Dept), விஜிதா (BOC, Jaffna Bus stand), கவிதா (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அசோக்குமார் (KS Solar Electonics - Kalviyankadu), பிரதீப் (Ceylinco Life - Atchuvely), கோவேந்தன் (UK) ஆகியோரின் மாமனாரும், இராசவேல் (Norway), நாகலட்சுமி, கனகலட்சுமி, விஜயலட்சுமி, சத்தியலட்சுமி, பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற நிதிவேல் ஆகியோரின் சகோதரனும், ஐஸ்வதன், கிருஷ்ணிகன், கிருஷ்ணிகா, மானிஷா, அகர்ணீஷ், மிர்தனி, ஆதனி, விருந்தனி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (28.04.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுஜிதா அசோக்குமார் - 077 516 3318
விஜிதா பிரதீப் - 077 057 1560
கவிதா கோவேந்தன் - 0044 747 679 6030

விதானையார் ஒழுங்கை,
அச்சுவேலி வடக்கு.

(CS/28119) J-1

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 . 10 . 1949



மறைவு 27 . 04 . 2023

## அமரர் அரியகுட்டி அமுதராசா

(பற்றிக்)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டு சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

மாம்பிராய்,
காங்கேசன்துறை.

(CS/54823) J-1

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
077 610 3582

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 08 . 1942



மறைவு 25 . 04 . 2024

## அன்னலட்சுமி கமலேந்திரன்

'அப்பாவளவு' துர்க்காபுரம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது வன்னியசிங்கம் வீதி, தாவடியை வதிவிடமாகவும் கொண்ட அன்னலட்சுமி கமலேந்திரன் நேற்று (25.04.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - தங்கச்சியம்மா இணையரது அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - ருக்குமணி இணையரது அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கமலேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், தாரணி ஜெயகாந்தனின் (ஆசிரியை - மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை) அன்புத் தாயாரும், ஜெயகாந்தனின் (ஆசிரிய ஆலோசகர் கணிதம் - கிளிநொச்சி கல்விவலயம்) அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அங்கயற்கரசி, வேலும்மயிலும், அன்னபூரணி, சுந்தரமூர்த்தி மற்றும் சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீபுஸ்பநாதன், புனிதவதி மற்றும் சாம்பசிவமூர்த்தி, சத்தியசிவசொரூபினி, காலஞ்சென்ற குகேந்திரபதி மற்றும் ஜெயமணி, பத்மநாதன் காலஞ்சென்ற ஞானேந்திரன் மற்றும் கருணேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அபிநாஷின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.04.2024) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

258 /14,
வன்னியசிங்கம் வீதி,
தாவடி, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
மகள் - 077 198 3669

(CS54824) N-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 10 . 1953



மறைவு 24 . 04 . 2024

## கதிரமலை விஜயலட்சுமி

வேலணையைப் பிறப்பிடமாவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரமலை விஜயலட்சுமி நேற்றுமுன்தினம் (24.04.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - பரிபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கதிரமலையின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, சிவகலை மற்றும் முருகதாஸ் (கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநல சேவைத் திணைக்களம்) ஆகியோரின் சகோதரியும், கார்த்திகா (லண்டன்), திவாகரன் (மின் மானி வாசிப்பாளர் - இலங்கை மின்சார சபை), கிரிஜா (கணக்காளர் தொழிற்துறைத் திணைக்களம்), ஹரிகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சபேஸ்குமார் (நில அளவையாளர் - லண்டன்), பிரபாகரன் (கணக்காளர் - தீவக கல்வி வலயம்), ஆகியோரின் மாமியாரும், விக்னேஸ்வரி, காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் தியாகராஜா, மனோகரன், தவயோகராணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மகிஷா, பரணிஸ், கருணிகா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இல. 22, அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
077820 1936, 077 792 4636

(CS54828) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



யாழ். நல்லூர் சட்டநாதர் வீதியைப் பிறப்பிடமாகவும், இந்தியா, தமிழ்நாடு, மதுரையை வசிப்பிடமாகவும் கொண்ட

## ஜெயக்குமார் செல்வநாயகம்

**நாட்கள் 31 கடந்தாலும் ஆறிடுமோ உங்கள் நினைவலைகள்!**

நேற்றுப் போல் எல்லாம் எம்
நெஞ்சோடு நினைவிருக்க
காற்றுப் போல் கண்களுக்கு
தோன்றாமல் நிற்கின்றீர்
தோற்றுப் போனது எம்
எதிர்பார்ப்பு எல்லாம் தான்
எம்மோடு இயந்திரமாய் இயங்கிய
இனிய ஜீவன் அவர் இன்று எம்மோடு இல்லை

ஆயிரமாயிரம் வினாக்கள்
விடைசொல்ல ஒரு நிமிடம் வாரீரோ...?
விளையாட்டாகினும் கூட
சில மணித்துளிகள்
விழி அசைக்க மாட்டீரோ...?
காலங்கள் பல சென்றாலும்
கடைசி வரை உங்கள் நினைவு
எம் நெஞ்சை விட்டு அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**

(cr.42286) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சத்தியசோதனை' நாடகம் திருமறைக் கலாமன்றத்தில் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 26

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் தயாரிப்பில் பேராசிரியர் சி.ஜெய்சங்கரின் நெறியாள்கையில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'சத்திய சோதனை' எனும் நாடகம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு இல.286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

நடைமுறைக் கல்வி பற்றிய கேள்வியையும் பொருத்தமான கல்வி முறையின் தேவை பற்றியுமான உரையாடலைத் தூண்டுவதாக இந்த நாடகம் அமைந்துள்ளது.

நாடக ஆற்றுகையைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (ச)




# ஊடகவியலாளர் ரூபனின் அஞ்சலி நிகழ்வு நேற்று!

யாழ்ப்பாணம், ஏப்.26

ஊடகவியலாளர் செல்வரத்தினம் ரூபனின் 14ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பொன்னாலையில் நேற்று மாலை கடைப்பிடிக்கப்பட்டது.

பொன்னாலை வெண்கரம் இலவச படிப்பகத்தில் மாலை நான்கு மணியளவில் ஊடகவியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான பொன்ராசா தலைமையில் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

ஊடகவியலாளர் செல்வரத்தினம் ரூபன் இறுதிக்கட்ட போரின்போது, தினக்குரல் பத்திரிகையின் உதவி ஆசிரியராகக் கடமையாற்றியபோது யாழ்ப்பாணத்தின் கள நிலைவரங்களை ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)






நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் பிரதேச மட்ட ஆரம்ப நிகழ்வு, ஜே/114 திருநெல்வேலி மத்தி வடக்கு கிராம அலுவலர் பிரிவில், நல்லூர்ப் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ப-66)

# விஜயதாஸவுக்கு எதிராக களமிறங்கிய பெரமுன!

கொழும்பு, ஏப்.26

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவை அமைச்சரவையில் இருந்து நீக்கவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது எனத் தெரியவருகின்றது. எதிரணி அரசியல் நடத்துகின்றோம் எனக்கூறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதாலும், அந்தக் கட்சியில் பதவியை ஏற்றதாலும் அவரை அமைச்சரவையில் இருந்து நீக்கவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

விஜயதாஸவுக்குப் பதிலாக அமைச்சரவைக்குள் தம்மிக்க பெரேராவை உள்வாங்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது . இந்தக் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி அமைச்சரவையை மறுசீரமைத்தால் நீதி அமைச்சுப் பதவி சுசில் பிரேமஜயந்தவுக்கும், கல்வி அமைச்சு தம்மிக்க பெரேராவுக்கும் வழங்கப்படக்கூடும் என அறியமுடிகின்றது. (எ-44)

## காணி....

ரம் வழங்கப்பட்ட அற்றோனித் தத்துவப் பத்திரத்தைப் பயன்படுத்தி, அந்த நபர் காணியை மூன்று துண்டுகளாகப் பிரித்து ஒரு பகுதியை வங்கியில் ஈடுவைத்துள்ளார். மற்றொரு பகுதியை ஒருவருக்கு விற்றுள்ளார். இன்னொரு பகுதியை தனது நெருங்கிய உறவினர் ஒருவருக்கு நன்கொடையாக எழுதி பின்னர் மீண்டும் தன் பெயருக்கு மாற்றியெழுதியுள்ளார்.

இது தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமையவே அந்த நபர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர் விளக்கமறியல் வைக்கப்பட்டு அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளிபாத மலையில் மாயமான இளைஞன் மீட்பு

கொழும்பு, ஏப்.26

சிவனொளிபாதமலையில் இருந்து கீழே குதித்துக் காணாமற் போன இளைஞன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மதியம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை, சூரியவெவ பிரதேசத்தில் இருந்து இரண்டு பெண்களுடன் சிவனொளிபாதமலை சென்ற 33 வயதான இளைஞன் மலையின் பாதுகாப்பு வேலியில் இருந்து குதித்துக் காணாமற் போயிருந்தார்.

இந்தநிலையில் நல்லதண்ணிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரே தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் விறகு வெட்டச் சென்ற போது, சுயநினைவற்ற நிலையில் இளைஞன் ஒருவன் இருப்பதைப் பார்த்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் இளைஞனை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். (எ-இ)

# ரைசியின் வருகையால் வாகனச்சாரதிகள் எரிச்சல்

கொழும்பு, ஏப்.26

ஈரான் ஜனாதிபதி ரைசியின் விஜயத்தின் போது ரைசி பயணம் செய்த பாதைகளில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந் தது.

இதனால் வாகனங்கள் வீதிகளில் நீண்ட நேரமாக மறித்து வைக்கப்பட்டிருந்தன. எரிச்சலடைந்த வாகனச்சாரதிகள் ஈரான் ஜனாதிபதியின் வாகனத் தொடரணி பயணித்த போது தமது வாகனங்களின் ஹோர்ன்களை அடித்தும் கூக்காட்டியும் தமது எரிச்சலை வெளிப்படுத்தியிருந்தனர். (ப-6)




தென்மராட்சி பிரதேச செயலக பன்னிரு மாத விளக்கு வேலைத்திட்டத்தின் கீழ் சித்திரைப் புத்தாண்டுக்கு பயன்படுத்தும் மருத்துநீர் தயாரிக்கும் முறைபற்றி சாவகச்சேரி நகர் அழகிய சிறுவர் சமூகத்தினருக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (எ-9)



இணுவில் பொதுநூலக சனசமூக நிலைய ஆண்டுவிழாவை முன்னிட்டு, லம்போதரா விளையாட்டுக்கழகம் முன்னெடுத்த சதுரங்கச் சுற்றுப் போட்டி நிகழ்வு, இணுவில் பொதுநூலகத் தலைவர் ம. கஜந்தரூபன் தலைமையில் இணுவில் பொதுநூலக மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. (ப-66)

கரவெட்டிப் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்தில் குருதிக்கொடை நிகழ்வு ஒன்று கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் பலர் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர். (ப-100)



**Union's Colors Nite-2024**
**நிகழ்வினை பிற்போடுதல்**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் யூனியன் கல்லூரி மைதானத்தில் 27/04/2024 ஆம் திகதி இடம்பெற இருந்த **Union's colors nite - 2024** நிகழ்வானது தவிர்க்க முடியாத காரணத்தினால் 25.05.2024 ஆம் திகதிக்கு பிற் போடப்பட்டுள்ளது என்பதை யூனியன் மைந்தர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

ச.பிறேமினன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம் யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை.

(CR 42259) A-1

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ/து) (லிப்கோ)
பதிவிலக்கம் : J/2063

**பொதுக்கூட்டம் - 2024**

*அழைப்பு*

காலம் : 27.04.2024 (சனிக்கிழமை)
நேரம் : முற்பகல் 10.30 மணி
இடம் : சங்கத் தலைமைக் காரியாலய பிரதான மண்டபம்
தலைவர் : திரு.அன்ரன் கிறிஸ்டர் ஸ்ரீபன்

(CR 42287) A-1

**மரண அறிவித்தல்**



**திருமதி ஜெயந்தி ஜெயதரன்**

(உப அதிபர் - மகாஜன கல்லூரி, தெல்லிப்பழை,
முன்னாள் யூனியன் கல்லூரி உடல்கல்வி ஆசிரியர், பழைய மாணவி)

குருநாதர் சுவாமி கோவிலடி தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயந்தி ஜெயதரன் அவர்கள் நேற்று (25.04.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா மற்றும் சிவசிவா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாராயன்பிள்ளை சரஸ்வதி தம்பதியரின் மருமகளும், ஜெயதரனின் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் பெற்றோலிய கூட்டுதாபனம், சீமெந்து கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், சுகன்யா (ஆசிரியர், யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்), சஞ்சீவன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெறு (ஆசிரியர், பரி.யோவான் கல்லூரி) அவர்களின் மாமியாரும், அபிகேல்சஞ்சனா ஆகியோரின் பேர்த்தியாரும், ஜெயசீலன், காலஞ்சென்ற ஜெயச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (28.04.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மருதனார்மட பூகோள இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
உடுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 1710 940

(CS 330) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னொரு....

கொழும்பில் நேற்று இடம்பெற்ற தனியார் சொகுசு விடுதி திறப்பு விழா நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமையை நீங்கள் மறந்திருக்கப்போவதில்லை. ஜனாதிபதியின் அலுவலகம் சுற்றிவளைக்கப்பட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகவே மக்கள் அதில் பங்கெடுத்தனர். இருப்பினும் அந்த பொருளாதார சரிவிலிருந்து இரண்டு வருடங்களில் நாட்டை மீட்டெடுக்க எம்மால் முடிந்தது. தற்போது கொழும்பு சுற்றுலா நகரமாக மாறியுள்ளது. நட்சத்திர ஹோட்டல்கள் பல காணப்படுவதால் சுற்றுலா வியாபாரத்தின் மீது நம்பிக்கைவைக்க முடியும். சரிவடைந்த பொருளாதாரத்தை மீட்பதற்கான அஸ்திரமாகவும் அது அமைந்திருக்கும்.

சுற்றுலா வியாபாரத்தினால் இலங்கையை துரிதமாக மீட்கலாம். அதற்கான வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்கள் போராட்டம் மீண்டும் ஏற்படாத வாறான பொருளாதாரத்தைக் கட்டமைக்க வேண்டும். அதற்குத் தேவையான திட்டங்களை நாம் செயற்படுத்துவோம். இந்தத் திட்டங்களால் பொருளாதாரத்தையும் நிலைப்படுத்த முடியும். மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்வடையும் - என்றார். (அ-ம-6)

## பிரதான...

ணின் சகோதரன் கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாண நகர் பகுதியை அண்டிய கிராமத்தைச் சேர்ந்த 34 வயதுடைய அந்தப் பெண்ணின் தாய், தந்தை இருவரும் உயிரிழந்ததையடுத்து அவர் தனது மூத்த சகோதரியுடன் பருத்தித்துறைப் பகுதியில் உள்ள ஆதரவற்றோர் இல்லத்தில் தங்கியிருந்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம், மூத்த சகோதரி உயிரிழந்த நிலையில், அவரது சகோதரன் அந்தப் பெண்ணை தனது இல்லத்துக்கு அழைத்துச் சென்றிருந்தார். சகோதரனின் வீட்டில் வசித்த காலப் பகுதியிலேயே அவர் குழுவொன்றால் போதைப்பொருள் நுகரவைக்கப்பட்டு அடித்துத் துன்புறுத்தப்பட்டு பாலியல் வன்புணர்வுக்கு தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டு வந்துள்ளார். இவ்வாறாக போதை ஊசி செலுத்தி வன்புணர்வுக்கு உட்படுத்தி சித்திரவதை செய்யப்பட்ட போது காயமடைந்த அந்தப் பெண் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அண்மையில் சேர்க்கப்பட்ட நிலையில், இதுதொடர்பில் யாழ்ப்பாணம் சிறுவர் பெண்கள் பிரிவில் முறைப்பாடு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்தப் பெண்ணின் சகோதரன் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். விசாரணையின்போது, பாதிக்கப்பட்ட பெண்ணின் சகோதரனே அந்தப் பெண்ணை பாலியல் தொழிலில் கட்டாயப்படுத்தி ஈடுபட வைத்துள்ளதும், மருத்துவப் பரிசோதனைகளின்போது பெண்ணின் சகோதரன் பல தடவைகள் வன்புணர்ந்ததும் தெரியவந்துள்ளதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

சந்தேகநபர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அடுத்த 14 நாள்களுக்கு அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-26)

## தேடப்பட்ட...

ஞர் ஒருவர் கொல்லப்பட்ட நிலையில், வழக்கில் நீண்டகாலமாகத் தேடப்பட்ட சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் இந்தக் கொலை தொடர்பான வழக்குடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளில் ஒருவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (அ-ம-26)

## பாலியல்...

யில், அங்கிருந்த மூன்று பெண்கள் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி விடுதியில் பாலியல் துர் நடத்தைகள் இடம்பெறுகின்றன என்று நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சிறப்புச் சுற்றிவளைப்பின்போதே, 24 வயது தொடக்கம் 35 வயது வரை மதிக்கத்தக்க மூன்று பெண்களும், அந்த விடுதியை நடத்திவந்த 40 வயது முகாமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் அனைவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26)

## ஒரேநேரத்தில்...

நாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுள்ளது.

இது திடீரென தற்செயலாக இடம்பெற்ற சம்பவம் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விக்ரோறியாவிலிருந்து சீஷெல்ஸ் நோக்கிப் பயணப்பட்ட விமானமே அவசர தேவை கருதி தரையிறக்கப்பட்டுப் புறப்பட்டுச் சென்றதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிரியத் தலைநகர் டமஸ்கஸில் அண்மையில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் ஈரானிய இராணுவத் தளபதிகள் மற்றும் போர்த் தந்திரிகள் என 11 பேர் கொல்லப்பட்டனர். இதையடுத்து ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் மத்திய கிழக்கில் நேரடி மோதல்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன், ஈரானிய அதிகாரிகள் வெளிநாடுகளில் வைத்து கொல்லப்படுகின்றமை கடந்த சில வருடங்களாக இடம்பெறும் சம்பவமாகவே உள்ளது. ஈரானின் முதல் நிலைப் போர்த்தந்திரியாக அறியப்பட்ட காசிம் சுலைமானியும் ஈராக்கில் வைத்தே கொல்லப்பட்டார். இவ்வாறானதொரு பின்னணியில், ஈரானிய ஜனாதிபதி பயணம் மேற்கொண்ட சமநேரத்தில் இஸ்ரேலிய விமானமும் பயணித்துள்ளமை சர்ச்சைகளையும் ஏற்படுத்தியுள்ளது. (அ-ம-6)

## போதைப்பொருள்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீதிமன்றத்தில் போதைப்பொருள்கள் பாதுகாக்கப்படும்போது அவை திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் பலர் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர். ஆதலால், இனிவரும் காலங்களில் நீதிமன்ற வளாகங்களில் போதைப் பொருள்கள் பாதுகாக்கப்படமாட்டாது. அவற்றின் மாதிரிகள் வழங்கப்பட்ட பின்னர் போதைப்பொருள்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், போதைப்பொருள்களை எரிக்கும்போது 800 தொடக்கம் ஆயிரத்து 100 செல்சியஸ் வெப்பம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலும் இனிவரும் நாள்களில் கவனம் செலுத்தப்படும் - என்றார். (அ-ம-6)

## வடமாகாணப்....

வருதல் நியாயமற்றது. அது வேலையற்ற பட்டதாரிகளைப் பாதிக்கின்றது, வடமாகாணத்திலுள்ள விசேட தேவையுடைய பட்டதாரிகளின் வாழ்வாதாரம் தொடர்பிலான அரசாங்கத்தின் கரிசனை என்ன?, வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தில் எதிர்கொள்ளும் அவமானங்களும், சவால்களும் அதன் ஊடாக ஏற்படும் மனஅழுத்தங்கள் மற்றும் பட்டதாரிகளின் எதிர்காலம் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் என்ன? ஆகிய விடயங்களை வலியுறுத்தியே இந்தப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபடவுள்ளனர்.

கவனவீர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கான கோரிக்கைகள் அடங்கிய மனு வடமாகாண ஆளுநருக்குக் கையளிக்கப்படவுள்ளதுடன், வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கான மனு கையளிப்பும் இடம்பெறவுள்ளதாக வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

## நீதிபதி....

இந்தச் சம்பவம் நடந்திருந்தது. இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி டி.எஸ். சூசைதாஸன் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிபதி இளஞ்செழியனின் பொலிஸ் மெய்ப்பாதுகாவலராகக் கடமையாற்றியவரும் எதிரியின் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவரும் எனக் குறிப்பிடப்படும் மற்றைய நபர் நேற்றுச் சாட்சியமளித்தார். சாட்சியினை அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிஷாந்தன் நெறிப்படுத்தினார். இதன்போது, நீங்கள் பயன்படுத்திய கைத்துப்பாக்கியை உங்களால் அடையாளம் காண்பிக்க முடியுமா? எனக் கேட்டிருந்தார். 'ஆம்' என சாட்சி பதிலளித்திருந்தார்.

ஆனால் குறித்த கைத்துப்பாக்கி மன்றில் இருந்திருக்கவில்லை, குறித்த சம்பவத்தில் பயன்படுத்திய கைத்துப்பாக்கி அரச பகுப்பாய்வுக்காக அனுப்பப்பட்ட நிலையில் அது மீளவும் கிடைத்திருக்கவில்லை. அதன் காரணத்தினால் குறித்த சாட்சியத்தைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்தே வழக்கு மே மாதம் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அத்துடன், வழக்கின் பிரதான சான்றுப்பொருளான கைத்துப்பாக்கியை அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திடம் இருந்து மீளப்பெற்று மன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு நீதிவான் டி.எஸ்.சூசைதாஸன் அறிவுறுத்தினார்.

இந்த வழக்கில் நீதிபதி இளஞ்செழியனிடம் இருந்து நேற்றுமுன்தினம் சாட்சியம் பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-26,126,66,100)

## தமிழரசுக்கு...

குகதாசன் நேற்றைய தினமும் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் அவரது முகவரிக்கு அழைப்புக் கட்டளை அனுப்புமாறு நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

முதலாம் மற்றும் மூன்றாம் எதிராளிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தங்கள் தரப்புக் கருத்துகளை முன்வைப்பதற்கு கால அவகாசம் கோரினார். இதனையடுத்து எதிராளிகள் தமது சமர்ப்பணங்களை முன்வைக்க அவகாசம் வழங்கி ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை- இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பில் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றபோது குறித்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26,66,125)

## 60 பவுண்....

வீட்டுக் கூரையில் இருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புளொட் அமைப்பின் மத்தியகுழு உறுப்பினரான வவுனியா நகரசபையின் முன்னாள் உபநகரபிதாவின் வீட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் 60 பவுண் நகையும், கடவுச்சீட்டு ஒன்றும் திருடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளரால் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த முறைப்பாட்டையடுத்து வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போதே, வீட்டின் கூரைப் பகுதியின் கீழ் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 60 பவுண் நகைகளும், கடவுச்சீட்டும் மீட்கப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டில் நின்றவர்கள் மற்றும் வெளிநாட்டில் இருந்து வருகை தந்து தங்கியிருந்த அவர்களது உறவினர் ஆகியோர் பொலிஸாரால் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். நகைகள் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றை நீதிமன்றில் பாரப்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-18)

## முதியவரொருவர்...

பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு கிளிநொச்சி நீதிமன்றில் அறிக்கையிட்டு சடலத்தை மீட்டு கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டுசென்றனர்.

அங்கு திடீர் மரண விசாரணை அதிகாரியின் பணிப்பின் பேரில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தொடங்கும் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் அசதி உண்டாகும். மனவருத்தங்கள் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். எதிலும் வெற்றியே ஏற்படும்.

**இடபம்:** தொட்டது துலங்கும் நல்ல நாள். காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியமும் மேம்படும். சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். நிறைவேறும்.வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் கூடுதலாக இருக்கும்.

**மிதுனம்:** திடீர் செலவுகள் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அம்மனை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் இனம்தெரியாத சோர்வு ஏற்பட்டு நீங்கும். செலவுகள் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமை மிக அவசியம். சிரமங்கள் குறையும். வழிபாடு நலம் சேர்க்கும்.

**சிம்மம்:** உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெருமை உண்டாகும். முருகப்பெருமானை வழிபட நன்மைகளைப் பெறலாம்.

**கன்னி:** குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். திடீர் பணவரவுக்கும், திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அலைச்சல் ஏற்படலாம். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அனுசரித்துச் செல்வது நல்லது. புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். செலவு செய்யவேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். நண்பர்கள் பணஉதவி கேட்டு வருவார்கள். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு.

**மகரம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். நற்பலன்கள் அதிகரிக்கும். சிரமங்கள் குறையும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**கும்பம்:** செயல்களில் சிறு கவனம் தேவை. புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. வியாபாரத்தில் இலாபம் சற்று கூடுதலாகக் கிடைக்கும்.

**மீனம்:** எதிலும் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். திடீர் செலவுகளால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பப் பெரியவர்கள் அனுசரணையாக இருப்பார்கள். வேங்கடேச பெருமாளை வழிபடுவதன் மூலம் சிரமங்கள் குறையும்.

# ஹைதராபாத் அணியை வீழ்த்தியது பெங்களூர்!

**ஹைதராபாத், ஏப். 26**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில், பலம்பொருந்திய ஹைதராபாத் அணியை மிக இலகுவாகத் தோற்கடித்தது பெங்களூர் அணி.**


கிறீன்

முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணிக்கு டுபிளஸி அதிரடியான ஆரம்பத்தையும், கோலி நிதானமாக ஆட்டத்தையும் வெளிப்படுத்தினார்கள். 12 பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற்ற ஆட்டமிழந்தார் டுபிளஸி. 6 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் வில் ஜக்ஸ். கோலி நிலைத்து நின்றாலும் அவர் ஓட்டக்குவிப்பில் ஈடுபடவில்லை. மாறாக நிதானத்தையே கடைப்பிடித்தார். இதனால் ஏற்பட்ட தொய்வு நிலையை தன் அதிரடியால் சரிசெய்தார் படிதார். 20 பந்துகளில் 50 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் படிதார். கோலி 43 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், அவருடைய ஆட்டம் முடிவுக்கு வந்தது. கமரூன் கிறீன் இறுதிக்கட்ட அதிரடியைக் கையிலெடுத்து 20 பந்துகளில் 37 ஓட்டங்களைக் குவிக்க முடிவில் 7 விக்கெட்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது பெங்களூர்.

பந்துவீச்சில் உனத்கட் 3 விக்கெட்களையும், நடராஜன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினார்கள். பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு ஆரம்ப வீரர் அபிஷேக் சர்மா மற்றும் ட்ராவிஸ் ஹெட் இருவரும் பெரும் நம்பிக்கை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் ட்ராவிஸ் ஹெட். 13 பந்துகளில் 31 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார் அபிஷேக் சர்மா. எய்டர் மார்க்ரம் 7, ரெட்டி 13, கிளாசன் 7 என அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதையடுத்து ஹைதராபாத் அணியின் வெற்றி வாய்ப்பு மங்கத் தொடங்கியது. சபாஸ் அஹமட் நிலைத்து நின்றாலும் மறுமுனையால் விக்கெட்கள் வீழ்ந்தன. சபாஸ் அஹமட்டின் ஆட்டம்கூட தாக்கத்தை ஏற்படுத்தவல்ல அதிரடி என்றில்லை. முடிவில் 8 விக்கெட்களை இழந்து 171 ஓட்டங்களை மட்டுமே ஹைதராபாத் அணி பெற்றது. சபாஸ் அஹமட் 37 பந்துகளில் 40 ஓட்டங்களைப் பெற்றார். 35 ஓட்டங்களால் பெங்களூர் அணி வெற்றிபெற்றது.

(ம)



தென்மராட்சிப் பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான இலவச அரிசி வழங்கும் நிகழ்வு கைதடியில் அண்மையில் இடம்பெற்றது. பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டபதில் செயலர் ம.பிரதீபன் கலந்துகொண்டார். (ப-9)

# எரிகாயங்களுடன் முதியவரின் சடலம்

யாழ்ப்பாணம், ஏப். 26

அளவெட்டி தெற்குப் பகுதியில் முற்றாக எரிவடைந்த நிலையில், முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த முதியவர் தனது மகளுடன் வசித்து வந்துள்ளார். இந்த நிலையில் நேற்று மாலைவேளை அவரது மகள் வெளியே சென்றிருந்தார். இதன் பின்னரே தீவிபத்து ஏற்பட்டு அவர் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-27)

**விற்பனைக்கு**

தடுப்பூசி போட்ட லயன் பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 172 1074

(CS/54825) J-1

**வாடகைக்கு உண்டு**

நல்லூரில் தனிப் பாதையுடன் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு. 02 பெண்கள் குடியிருக்க குறைந்தது ஒரு வருடத்திற்கு மாத்திரம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 756 1066

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு சமையலறை சுத்திகரிப்பாளர்கள் தேவை.

தொடர்பு:- 070 745 8567

(CS/3333) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.